**தலைப்பு 16 – பாராளுமன்றம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாராளுமன்றத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 யூலை 05 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 05 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாராளுமன்றத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்பட்டது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.4 **நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பவை பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

#### (அ) ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கிடப்படும் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2013 சனவரி 24 ஆந் திகதிய எஸ்ஏ/ஏஎஸ்/ஏஏ சுற்றுநிருப அரச கணக்குகள் சுற்றுநிருபத்தின் 3 ஆவது பந்திக்கு முரணாக, | பாராளுமன்றத்திற்கு உரிய காணி மற்றும் கட்டிடங்களின் சொத்துக்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்தித் தருமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் வேண்டப்பட்டுள்ளதுடன் ஞாபகமூட்டல்கள் கடிதங்கள் பல | சுற்று நிருபத்தின் பிரகாரம் நடைமுறை யல்லாத சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட |

| | | | |
|---|---|---|---|
| | பாராளுமன்றத்திற்கு உரித்தான மாதிவல வீடமைப்புத் தொகுதி நுவரஎலிய சென்மதி மாளிகை மற்றும் அநுராதபுரம் மெத் செவனைக்கு உரிய காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்க வில்லை. | அனுப்பப்பட்டுள்ளதுடன் மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொடுப்பதற்கு திணைக்களம் இதுவரையும் தவறியுள்ளதாக மற்றும் இது தொடர்பாக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு மீண்டும் ஞாபகமூட்டல் கடிதமொன்று அனுப்பப்படுவதாக | வேண்டும். |
| (ii) | அன்பளிப்பாக கிடைக்கப் பெற்ற ரூபா 52,217,264 சொத்துக்கள் கணக்கிடப்பட்டிருக்க வில்லை. | அன்பளிப்பாக கிடைக்கப் பெற்ற சொத்துக்களின் பெறுமதி 2021 ஆண்டிற்குள் கணக்கிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக | அன்பளிப்பாக கிடைக்கப் பெற்ற சொத்துக்களை தாமதமின்றி கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |

### 1.6.2 முற்பணக் கணக்கு மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| முற்பணங்கள் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிக்கும் மற்றும் தனிப்பட்ட மீதிக்கும் இடையில் மீளாய்வாண்டிலே ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளில் ரூபா 498,260 மற்றும் ரூபா 125,843 வேறுபாடொன்று காணப்பட்டது. | முற்பணங்கள் கட்டுப்பாட்டு கணக்கின் மீதி மற்றும் தனிப்பட்ட கடன் வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்தத்திற்குமிடையில் 2019 திசெம்பர் 31 இல் காணப்பட்ட ரூபா 498,260 வேறுபாடு 2020 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றை தயாரிக்கும் போது ரூபா 125,843 வரை குறைத்துக் கொள்வதற்கு முடியுமானதுடன் இப்போதைக்கு அந்த வேறுபாடு ரூபா 62,217.60 வரை குறைத்துக் கொள்வதற்கு முடியுமானது என்பதாக, | கணக்கு களுக்கிடையில் காணப்படுகின்ற வேறுபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பொறுப்புக்கள் பதிவேட்டில் மற்றும் திறைசேரியின் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் உள்ளடக்கப்படாத ரூபா 3,199,200 பொறுப்புக்கள் 2021 ஆம் ஆண்டிலே தீர்க்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்திலே நிதிப் பிரிவிற்கு விபரங்கலை தேடிக் கொள்வதற்கு முடியாது போன பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உரிய தொகை பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை என்பதுடன் இந்த குறைபாடுகள் ஏற்பட்டுள்ளது என்பதையும் எதிர்காலத்தில் இந்த நிலைமையை குறைத்துக் கொள்ளக் கூடிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது என்பதாக | சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 94(2) இன் பிரகாரம் விநியோகம் மற்றும் சேவைகள் பொறுப்புக்களுக்கு உரித்தல்லாத ரூபா 194,831 ஆன பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | வகைப்படுத்தல் கோளாறொன்றின் காரணமாக இந்த குறைபாடு இடம்பெற்றுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் போது இவ்வாறான குறைபாடுகள் இடம்பெறாத வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டதாக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்புக்கள் குறிக்கப்பட வேண்டும். |

### 2.2 அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பணிநீக்கம் செய்யப்பட்ட, சேவையை விட்டுச் சென்ற ஏனைய உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 05 | கடன் மீதிகளின் ரூபா 232,362 ஆன கடன் மீதிக்குள் உள்ளடக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா | அறவிடப்படாமல் காணப்படுகின்ற கடன் மீதிகளை அறவிடுவதற்கு துரிதமான நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்களை விஞ்சிய மீதிகளின் மொத்தம் ரூபா 941,450 ஆகும். | 100,336 தற்போது அறவிடப்பட்டுள்ளதுடன், மேலும் அறவிடப்பட வேண்டிய பெறுமதி ரூபா 132,026 மற்றும் ரூபா 310,386.67 ஆன கடன் மீதிகளை அறவிடுவதற்கு முடியாதுள்ளதுடன் உறுதிப்படுத்தப்பட்ட ரூபா 25,000 ஐ விட குறைந்த கடன் மீதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்துடன் மொத்தம் ரூபா 36,063.33 ஆன கடன் நீக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் ரூபா 25,000 க்கு கூடிய சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர் மற்றும் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 333,136.34 ஆன கடன் மீதியை நீக்கி விடுவதற்கு அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் PFD/RED/WO/2020/30 ஆம் இலக்க மற்றும் 2021 யூன் 08 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் மேலும் பணி நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 398,701.85 ஆன தொகைக்கு சட்டரீதியான நடவடிக்கைகள் நிறைவடையாது காணப்படுவதுடன் நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு இதுவரை முடியாது போயுள்ளதாக | மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | அரச கணக்குகள் திணைக்களத்தின் 262/2017 மற்றும் 2017 திசெம்பர் 29 ஆந் திகதிய சுற்றுநிருபத்தின் 4 ஆவது பந்தியின் அறிவுரை | 2018 ஆம் ஆண்டிற்கு உரிய ஒரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,500 வைபவ முற்பணத்தை செலுத்துமாறு எழுத்து மூலமாக மற்றும் | சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

கவனத்திற் கொள்ளப்படாது 2018 மற்றும் 2019 வருடங்களில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 162,024 முற்பணக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

தொலைபேசியின் ஊடாக வார்த்தையாலும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் 2021.05.05 ஆந் திகதி மீண்டும் தொலைபேசி ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் நிலுவைப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு மேலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒரு பெண் உத்தியோகத்தரிடமிருந்து 2019 ஆம் ஆண்டிற்குரிய அறவிடப்படவேண்டிய ரூபா 154,524 ஆன கடன் மீதியை அந்தப் பெண் உத்தியோகத்தர் வெளிநாட்டு தூதர சேவைக்காக 2008.05.01 ஆந் திகதியில் இருந்து 2011.09.09 ஆம் திகதி வரை இணைக்கப்பட்டு சேவையாற்றியுள்ள காலத்திற்கான ஓய்வூதிய சம்பள பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டமை தொடர்பாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஊடாக உறுதியொன்றை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் உரிய உறுதியை ஓய்வூதிய சம்பள பணிப்பாளர் நாயகத்திற்கு பெற்றுக் கொடுத்ததன் பின்னர் ஓய்வூதிய பணிக் கொடையிலிருந்து இந்தக் கடன் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **திட்டமிடுதல்**

**செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 5,018,000 ஆன மதிப்பிடப்பட்ட செலவொன்று அடங்கலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்காக ரூபா 2,000,000 ஏற்பாடுகள் மாத்திரம் கிடைக்கப் பெற்றதன் காரணமாக திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாது போனது. | ஏற்றுக் கொள்வதுடன் வருடாந்த பயிற்சித் திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொள்ளும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டு வரையறைக்கு முடிந்தவரை பொருந்தும் வகையில் தயாரிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக | மதிப்பீட்டை சரியாக மற்றும் நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில் தயாரிக்கப்பட வேண்டும். |

3.2 **முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 பெப்ரவரி 15 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றுநிருபத்தின் 1.2 பந்தி மற்றும் வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பாராளுமன்ற செயலாளருக்கு விநியோகிக்கப்பட்டுள்ள TIP/SS/01/84 ஆம் இலக்க மற்றும் 2019 ஏப்ரல் 25 ஆந் திகதிய கடிதத்தின் அறிவுரைகளை கவனத்திற் கொள்ளாது, சிரேஷ்ட மட்டத்திலான நிறைவேற்று அதிகாரப் பதவியில் ஆறு வருடங்கள் சேவையாற்றிய சேவைக் காலத்தை கொண்டிராத பாராளுமன்ற பதவியணியின் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு | அண்மையில் பாராளுமன்றத்தின் நூலகருக்கு நிவாரணமளிக்கின்ற மோட்டார் வாகன அனுமதிப்பத்திரமொன்று விநியோகிப்பதற்கு உள்ள வல்லமை தொடர்பாக வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளரிடம் மேற்கொள்ளப்பட்ட விடய தெளிவுபெறுதலின் போது அவரால் 2015.02.05 திகதியின் கீழ் அவரின் முன்னோடியினால் எழுத்து மூலமாக வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்திற்கு இணக்கமில்லாத அவதானமொன்று | சுற்றுநிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

நிவாரணமளிக்கின்ற மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது.

சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதனால் அவரின் முன்னோடியினால் கொடுக்கப்பட்ட முடிவு நேரடியாக எதிர்மறையொன்று இடம்பெறவில்லை என்பதுடன் அவ்வாறான நிலைமையொன்றினால் உத்தியோகத்தர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த வரப்பிரசாதமொன்றின் அடிப்படையொன்று இல்லாமல் நீக்குதல் பொருத்தமற்றது. அதனால் அது ஒரு அவதானத்தை மேற்கொள்வதாக மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டிலிருந்தே நடைமுறைப்படுத்தப்பட்ட நடைமுறைகள் இதுவரை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு ஐயவினாவின் பின்னர் நிவாரணமளிக்கின்ற மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் கைவிடப்பட்டுள்ளதுடன் இந்த பிரச்சினைக்குரிய நிலைமை தொடர்பாக நிதி அமைச்சரின் உரிய ஏனைய அதிகாரிகளின் கவனத்திற்கு உட்படுத்துவதற்கு மற்றும் அறிவுரைகளை பெற்றுக் கொள்வதற்கு கூடிய விரைவில் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்வதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**4. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் காணப்படுகின்ற 153 வெற்றிடங்களில் 08 சிரேஷ்ட மட்டத்திலான பதவிகளாகும். | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பதவியணியினரின் அங்கீகரிக்கப்பட்டது 984 ஆகவும், உண்மையானது 831 ஆகவும், மற்றும் வெற்றிடங்கள் 153 ஆகவும் ஊழியர்கள் எண்ணிக்கை காணப்படுவதாக | தேவையை கருத்திற் கொண்டு, வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |